**தமன்கடுவ பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 29 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 04 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜூன் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து தமன்கடுவ பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

களஞ்சியப் பண்டங்கள் தொடர்பாக களஞ்சிய முற்பணக் கணக்கு முறை கடைபிடித்திருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான எதுமல்பிடிய முன்பள்ளி கட்டிடத்தை அபிவிருத்தி செய்வதற்காக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 177,403 இற்கான தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபையின் கேற்போர் கூடம், பெந்திவெவ கேற்போர் கூடம் மற்றும் பெந்திவெவ ஆயுள்வேத நிலையம் ஆகியவற்றிற்கு திரை சீலை போடுவதற்காக செலவிடப்பட்ட ரூபா 220,850 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான செயற்திட்டங்கள் தொடர்பாக பெற வேண்டிய 06 கடன்பட்டோர் மீதிகளின் பெறுமதி ரூபா 850,000 தொகையொன்று கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டிருந்தது.

(ஈ) சபைக்கு சொந்தமான டிரக்டர் வண்டியின் பெறுமதி ரூபா 50,000 தொகையினால் குறைவாகவும் மற்றும் சார்க்கடை பவுசரின் பெறுமதி ரூபா 900,000 தொகையினால் மிகையாகவும் காட்டப்பட்டிருந்தது.

(உ) சபைக்குச் சொந்தமான புதுநகரில் உள்ள 4 கடைகள் மற்றும் காணியின் பெறுமதி ரூபா 7,050,000 தொகை எனினும் அதனை ரூபா 705,000 தொகையென கணக்கீடு செய்திருந்தமையால் சொத்துக்களின் பெறுமதி ரூபா 6,345,000 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) சபைக்குச் சொந்தமான பொலன்னறுவை வாராந்தச் சந்தை வளவில் மலசலகூட முறைமையை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 264,898 இற்கான தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

2 கணக்கு விடயங்கள் தொடர்பான அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளின் பெறுமதி மற்றும் நிதிக்கூற்றுக்களில் காட்டியுள்ள மீதிகளின் பெறுமதிகளிடையே ரூபா 2,331,496 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 பெற வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 03 பெற வேண்டிய கணக்கு மீதிகள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 20,876,050 இற்கான தொகை 2002 ஆண்டு முதல் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காதிருந்ததுடன் சம்பள மீளளிப்பு ரூபா 1,715,017 இற்கான மீதியொன்று 2014 ஆண்டு முதல் தீர்க்கப்படாமல் காணப்பட்டது.

### 1.3.5 கணக்காய்விற்கான ஆவணச்சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 18 கணக்கு விடயங்களின் பெறுமதியாகிய ரூபா 635இ665,589 தொகை தொடர்பான உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள், கணக்கீட்டு சபை அறிக்கைகள் மற்றும் விரிவான அட்டவணைகள் ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள்விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள்விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள்விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| (i) 149 ஆம் பிரிவு | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்திருந்த சுற்றுலாச் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள 06 ஹோட்டல்களில் இருந்து 2016 ஆண்டிற்கான கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ii) 150(1), 152(1) மற்றும் 153(1) ஆம் பிரிவுகள் | கைத்தொழில்கள், வியாபாரங்கள், திறந்தொழில்கள் மற்றும் அபிவிருத்தி செயற்படாத காணிகள் தொடர்பான அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு ஆண்டின் மார்ச் 31 திகதி அல்லது அதற்கு முன்னர் சபையின் செயலாளருக்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. |

(ஆ) 1988 இன் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல்சார் சட்டம்

சபைக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரத்தின் படி அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 31 வியாபாரங்களுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் 05 வியாபாரங்களின் காலங்கடந்துள்ள அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக தொடர்செயல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை

(i) 193 ஆம் விதி

ஒவ்வொரு வருமான விடயத்தின் கீழும் காணப்படும் பாதிடப்பட்ட நிதியேற்பாடுகள் மற்றும் குறைநிரப்பு அங்கீகாரங்களும் ஒப்பீடு செய்து மிகைகள் அல்லது செலவிடப்படாமல் சேமிக்கப்பட்டிருக்கும் மீதி பற்றிய விவரங்களை விளக்கும் கூற்றொன்று ஒவ்வொரு ஆண்டிறுதியிலும் உள்ளவாறு தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

(ii) 214 ஆம் விதி

2017 ஏப்ரல் மாதம் அளவிலும் 2016 ஆண்டிற்கான சபையின் ஆதனங்கள் மற்றும் பண்டங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் பல வருட காலமாக சபைக்குச் சொந்தமான 04 நூலகங்களின் புத்தகங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

(i) நி.பி. 104

2012 ஆண்டின் போது ஏற்பட்டிருந்த வாகன விபத்து ஒன்று தொடர்பாக ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) நி.பி. 110

வாகன விபத்துக்கள் தொடர்பாக சேதங்கள் பற்றிய பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் ஒஒளை ஆம் அத்தியாயத்தில் 4.5 ஆம் பிரிவு

இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 4 உத்தியோகத்தர்களிடமிருந்து நீண்ட காலமாக அறவிடப்பட வேண்டிய நிலுவைக் கடன் மீதி ரூபா 96,185 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை.

(ஊ) சுற்றறிக்கைகள் மற்றும் நிருபங்கள்

1980 திசெம்பர் 31 திகதிய 1980.∴40 இலக்கங் கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை

(i) 02 ஆம் பந்தி

சபைக்குச் சொந்தமான 240 கடைகள் தொடர்பாக 05 வருடங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட வேண்டிய வாடகைத் திருத்தம் செயற்படாமல் 2008 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த திருத்தத்தின் படி மீளாய்வாண்டின் போதும் கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தது.

(ii) 07 ஆம் பந்தி

வாடகையாளர் கடைகளை துணை வாடகைக்கு கொடுக்க முடியாது எனினும் சபைக்குச் சொந்தமான 05 கடைகள் ரூபா 15,000 முதல் ரூபா 20,000 வரை இடைப்பட்ட வாடகைக்கு துணை வாடகைக்குக் கொடுக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் படி, மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 24,976,586 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 28,972,672 தொகையாகும்.

### 2.2 வருமானம் நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையின் செயலாளரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடி யான வருமானம் | திசெம்பர் 31 திகதியில் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (ை) | வீதவரி மற்றும் வரி | 15,560,600 | 11,816,970 | 13,622,124 |
| (ைை) | வாடகை | 17,360,045 | 19,027,484 | 1,428,817 |
| (ைைை) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,210,000 | 5,463,243 | - |
| (ளை) | ஏனைய வருமானங்கள் | 43,094,650 | 34,541,341 | 24,481,277 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

ஆண்டிற்கான சிட்டை இடப்பட்டவைகளுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 19,295,950 தொகையில் அறவிடப்பட்டிருந்தது ரூபா 8,223,600 எனப்படும் 43 சதவீதம் மாத்திரமே.

### 2.2.3 கடை வாடகை

சபைக்குச் சொந்தமான கடைகளை வாடகைக்கு கொடுக்கும் போது உடன்படிக்கையின் பிரகாரம் கேள்வியினை ஏற்றுக்கொண்ட நாள் முதல் 14 நாட்களுக்குள் ஒரே முறையில் செலுத்தும் பணத்தினை (கீமணி) செலுத்தி முடிய வேண்டுமெனினும் 28 கடைகளில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,142,674 இற்கான தொகை 10 வருடங்களை விட கூடிய காலம் முதல் நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.2.4 ஏனைய வருமானங்கள்

(அ) சபைக்குச் சொந்தமான சிங்ஹபுர குடிநீர் செயற்திட்டத்தின் நீர் நுகர்வோர்களிடம் அறவிடப்பட வேண்டிய நீர்க் கட்டணம் 2014 ஆண்டு முதல் நிலுவையாகக் காணப்பட்ட போதிலும் அக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) தமன்கடுவ அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் முச்சக்கர வண்டி தரிப்பு நிலையங்களில் இருந்து கட்டணங்கள் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம்

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானத்தில் ரூபா 8,107,856 தொகை எனப்படும் 48 சதவீதம் நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.2.6 முத்திரைக் கட்டணம்

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 10,473,643 தொகைக்கான முத்திரைக் கட்டண வருமானத்தின் பணம் ஏதும் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையில் கடமையாற்றும் 38 நிரந்தர சுகாதார தொழிலாளர்களில் 08 பேரின் தினவரவு ஒரு மாதத்தில் 02 முதல் 12 வரையான மிகவும் பலவீனமான நிலையில் காணப்பட்டமையால் சபையின் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் போன்ற இன்றியமையாத சேவைகளை நடத்துவதற்கு இந்த நிலைமை பாதித்துள்ளது.

(ஆ) சபைக்குச் சொந்தமான பொலன்னறுவை வைத்தியசாலை சந்தியில் 5 இரட்டை மாடிக் கடைகள் மற்றும் 07 தனி மாடி கடைகளுக்காக சபையினால் வாடகையாளரிடம் உடன்படிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. அத்துடன் 06 கடைகளிலன் உடன்படிக்கைகள் முழுமை பெறாதவையாகக் காணப்பட்டது.

(இ) கடைகளை வாடகைக்குக் கொடுக்கும் போது மேற்கொள்ளப்பட்டிருந்த வாடகை ஒப்பந்தத்தின் படி மாதாந்த வாடகை தொடர்ச்சியாக 03 மாதங்கள் செலுத்தத் தவறுமிடத்து வாடகை உடன்படிக்கையை இரத்துச் செய்து நிலுவை தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனினும் சபைக்குச் சொந்தமான 19 கடைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய கடை வாடகை 03 மாதங்கள் முதல் 13 மாதங்கள் வரை நிலுவையாகக் காணப்பட்டது.

(ஈ) சபையினால் பயன்படுத்தப்படும் 4 வாகனங்களின் உரிமையை உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) 12 காணிகளின் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக காணி ஆணையாளர் நாயகத்திடம் அரசாங்க காணிகள் தொடர்பான சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) சேவையை விட்டு விலகிச் சென்றுள்ள காலத்தை அறுதியாக இனங்காணப்படாத பிரதியீட்டு தொழிலாளர் 07 பேரிடம் அறவிடப்பட வேண்டிய நிலுவைக் கடன்தொகை ரூபா 17,600 தொகை காணப்பட்டது.

(எ) தனம்கடுவ ஆயுள்வேத நிலைய பிணிஆய்வு நிலையத்திற்கு வரும் நோயாளர் எண்ணிக்கை வருடந்தோரும் குறைந்து செல்லும் நிலைமை ஒன்று அவதானிக்கப்பட்டதுடன் மருந்து வகைகளில் பற்றாக்குறை காணப்படல் இந்த நிலைமைக்கு காரணமாகியுள்ளது. மீளாய்வாண்டிற்காக பாதீட்டின் பிரகாரம் ரூபா 300,000 தொகையொன்று ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் செலவிடப்பட்டிருந்தது ரூபா 143,300 எனப்படும் 47 சதவீதம் மாத்திரமே.

(ஏ) மீளாய்வாண்டின் போது மூன்றாம் நிலையைச் சேர்ந்த செயலாளர் மற்றும் நிலைய பொறுப்பு அதிகாரிப் பதவி, இரண்டாம் நிலை அபிவிருத்தி உத்தியோகத்தர், கணக்கு உதவியாளர், நூலகர், தொழிநுட்ப உத்தியோகத்தர், வேலை மேற்பார்வையாளர், வருமான பரிசோதகர்கள், சுகாதாரப் பரிசோதகர், தீயணைக்கும் படையினர், இயந்திர இயக்குனர் ஆகிய பதவிகளில் 28 வெற்றிடங்கள் காணப்பட்டது.

(ஐ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மிகையாக பிரதியீட்டு அடிப்படையில் உள்ளூராட்சி ஆணையாளரின் எழுத்துமூல அங்கீகாரம் இன்றி 12 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டு சபை நிதியத்திலிருந்து ரூபா 3,120,700 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.

**3.2 செயற்பாட்டு திறமையின்மை**

ரஜரட்ட நவோதய விளையாட்டுத் திடலின் ஒரு பகுதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த சிறுவர் பூங்காவில் பொருத்தியிருந்த விளையாட்டு உபகரணங்கள் பொருட்பதிவேட்டில் பதியப்பட்டிருக்காததுடன் உத்தியோகத்தர் ஒருவரின் பொறுப்பில் காணப்படாமல் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுவதாகவும் எதுவித பராமரிப்பும் நடைபெறுவதில்லை என அவதானிக்கப்பட்டது.

**3.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான மூன்று வங்கிக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 1,034,634 தொகையான மீதிகள் பல வருட காலமாக செயற்படாது காணப்பட்டது.

(ஆ) சபைக்குச் சொந்தமான ரூபா 5,310,755 இற்கான 6 சொத்து விடயங்கள் 3 வருடங்கள் முதல் 5 வரை காலவீச்சில் எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபையின் கையிருப்பு மீதியில் ரூபா 64,347 பெறுமதியான குழாய் கிணற்று உபகரணங்களின் இருப்பு மீதியொன்று 2008 ஆண்டு முதல் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஈ) 2013 ஆம் ஆண்டின் போது டிரக்டர் கூட்டுத்தாபனத்தின் கட்டிடத்தை சபைக்கு உரித்தாக்கிய சந்தர்ப்பத்தில் உரித்தாக்கப்பட்ட 38 பலவின சொத்து விடயங்கள் மற்றும் 147 டிரக்டர் பண்ட அலகுகள் என்பன பயன்படுத்தப்படாமல் சபையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

### 3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

சபைக்குச் சொந்தமான பெந்திவெவ லீலாரதன வீரசிங்க கேற்போர்கூடம் வாடகைக்கு கொடுக்கும் போது மீளாய்வாண்டின் போது 27 சந்தர்ப்பங்களில் அறவிடப்பட வேண்டிய ரூபா 135,000 இற்கான தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை.

### 3.5 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் ஒரு நாளைக்கு சேகரிக்கப்படும் சுமார் 9 அல்லது 10 தொன் குப்பையினை வகைப்படுத்தப்படாமல் சேகரிக்கப்பட்டு பொதுவாக குப்பை மீள்சுழற்சி நிலையத்திற்கு கொண்டு வரப்பட்ட பின்னர் மீண்டும் வகைப்படுத்தப்படுகின்றமையால் வகைப்படுத்துவதற்காக 05 தொழிலாளர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் பயனற்ற செலவு ஒன்றாகியுள்ளது.

(ஆ) சேதனப் பசளையாக மாற்றப்பட்ட குப்பைகளை சந்தைப்படுத்துவதற்கு தயாரிப்பதற்காக அவற்றை அரிப்பதற்காக வலை உபகரணங்கள் தயாரிக்கப்படாமையால் சேதனப் பசளையாக மாற்றப்பட்ட குப்பைகள் மலைகளின் அளவு குவிந்து காணப்பட்டது.

(இ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அகற்றப்பட வேண்டிய மலகூட கழிவுப்பொருட்களை சுகாதாரப் பாதுகாப்புடன் அகற்றுவதற்கு பொருத்தமான செயல்முறையொன்று மற்றும் அகற்றுவதற்கு பொருத்தமான காணி ஒன்று இன்மையால் சபையின் பொறுப்பினை புறக்கணித்தல் ஒன்றினை போலவே சபைக்கு அறவிடப்படக் கூடிய வருமானம் ஒன்றினையும் இழந்துள்ளது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(ஆ) கணக்கீடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) கடன்பட்டோர்.:. கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) பதவியணி நிருவாகம்
(ஊ) உள்ளகக் கணக்காய்வு